முருகப்பெருமான் துணை

**மகான் கதம்பமகரிஷி அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**07.01.2024,** ஞாயிற்றுக்கிழமை

1. ஆறுமுகனார் அவதார வடிவே
அண்ணலே ஞான குருவே
மாறுதலை உலகினில் நடத்த
மாதவ தருமவானாக வந்த குருவே
2. குருவே ஆறுமுக அரங்கனே
குவலயத்தில் உன் பெருமை கூறி
பெருமைபட சோபகிருது சிலைதிங்கள்
பேதமற இருபானீர் திகதி கதிர்வாரம்
3. வாரமதில் துல்லிய ஆசிதனை
வழங்குவேன் கதம்ப மகரிஷியும்
பாரமான மக்களின் மனச்சுமை
பாவகரும வினைதொடரும் வாட்டம்
4. வாட்டமான கட்டங்கள் யாவும்
வருங்காலம் அகன்று மேவி
இட்டம்போல் காரிய வெற்றி
எல்லாவகையிலும் பாதுகாப்பு அடைய
5. அடையவே வேலவன் வழிபாடு
ஆற்றல்பட அனுதினமும் செய்து
தடைற அரங்கமகானை தேடி
தரிசித்து ஞானமும் பயில
6. பயிலவே பயபக்தி கூடி
பலிபாவ செயலுக்கு அஞ்சி
தயவான வாழ்வாக மாறி
தருமபாதையை தேர்வு செய்து

7. செய்துமே உலகோர் சிறப்பர்
சித்திமிக்க ஞானிகள் பூசையை
அய்யமற மக்கள் செய்துவர
அழிவிலா அறியாமை இல்லா வண்ணம்

8. வண்ணமுடன் அறிவுத் தெளிவு
வள்ளல் தன்மை கூடியே
எண்ணம் தூய்மை கொண்டு
எக்கணமும் வேலவனை சிந்தையில் ஏற்றி

9. ஏற்றியே ஏகாந்த நிலையில்
என் செயல் ஏதுமில்லையென
உற்றதொரு பூரண சரணாகதி
உலகமக்கள் கண்டு வர

10. வருகவே மாற்றம் உண்டு
வரலாறு பேசும்படி வாழ்வு
முருகப் பெருமான் ஆசியின்படி
முழுமை கண்டு நிறைவும் கண்டு

11. கண்டுமே பிறவிப் பயனை
கண்டடைந்து தேறுவர்
தொண்டுவழி சிறந்து மேலும்
தேசிகனால் ஞானிகளாவர்
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–